SN – 181

**III Semester B.C.A./B.H.M./B.Sc. (F.A.D.) Examination, Nov./Dec. 2013**
**(Freshers + Repeaters) (2012-13 and Onwards)**
**Paper – III : TAMIL LANGUAGE (Part – I)**

Time : 3 Hours Max. Marks : 100

I. விரிவான விடை தருக:

1) தானாண்மை-என்ற தலைப்பில் நாலடியார் கூறும் நீதிக்கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

**அல்லது**

நான்மணிக் கடிகை உணர்த்தும் கருத்துக்களை விளக்கி வரைக. **10**

2) மருவூர் பாக்கம், பட்டினப்பக்கச் சிறப்புக்களை சிலப்பதிகாரம் வழி விளக்குக.

**அல்லது**

ஐ வகை மன்றங்களை சிலப்பதிகாரம் வழி நின்று விளக்குக. **10**

3) காரைக்கால் அம்மையாரின் பிறப்பு, அவருடைய திருமணச் செய்திகளை பெரிய புராணம் வழி நின்று நிறுவுக.

**அல்லது**

சிவபெருமான் தம்மை எப்போதும் பாடுமாறு காரைக்கால் அம்மையாருக்கு அருளியமையினை விளக்கமாக தொகுத்துரைக்கவும். **10**

II. இடம் **சுட்டிப் பொருள்** விளக்கம் தருக:

1) ''கொலை யொக்கும் கொண்டுகண் மாறல்
புலை யொக்கும்
போற்றாகார் முன்னர் செலவு''

**அல்லது**

வேற் முற்றி முத்துதிரும் வெற்ப அதுவன்றோ
நாய் பெற்ற தெங்கம் பழம் **5**

2) ''பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க;

**அல்லது**

கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்
உண்ணிறை கரந்தகத் தொளித்து நீ ருகுத்தன
எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன! **5**

P.T.O.

3) பண அரவம் புனைந்து அருளும் பரமனார் திருத் தெண்டர்
உணவின் மிகு வேட்கையினால் ஒருவர் மனையுள் புகுந்தார்

**அல்லது**

''கொன்றைவார் சடையினார் தம் குரைகழல் போற்றிச் சிந்தை
ஒன்றிய நோக்கில் மிக்க உணர்வு கொண்டு உரை செய்கின்றனர்'' **5**

III. ஏதேனும் **ஒன்று** குறித்து கட்டுரை வடிவில் விடை தருக : **20**

1) புதுமைப் பித்தன் மக்களிடத்திலும், மக்களாட்சிலும் நம்பிக்கைக் கொண்டவர் என்பதை 'வாக்கும் வக்கும்' நாடகத்தின் வழி விளக்குக.

2) நடுத்தர வர்க்கத்தின் சோக வாழ்க்கையை காட்சிப்பாடுத்தும் 'சார் ! நிச்சயமா நாளைக்கு' ! நாடகத்தின் வழி விளக்குக.

3) 'குசேல' வியாதியை போக்கும் 'சஞ்சிவா' மனிதனிடம் தான் உண்டு என்பதை புதுமைப் பித்தன் நாடகத்தின் வழி காட்சிப்படுத்துக.

IV. எவையேனும் **ஏழனுக்கு** விடை தருக: **(7×5=35)**

1) சார்பெழுத்துக்கள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
2) போலி என்றால் என்ன ? அதன் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.
3) பகுபத உறுப்புக்களைச் சான்றுகளுடன் விளக்குக.
4) தொழிற் பெயர் என்றால் என்ன ? அதன் வகைகளை விளக்குக.
5) குறிஞ்சித் திணையின் முதல், கரு, பொருட்களை விளக்கி வரைக.
6) புறத்திணை என்றால் என்ன ?அதன் வகைகளைக் குறிப்பிடுக.
7) தளை என்றால் என்ன ? அதன் வகைகளைக் குறிப்பிடுக.
8) வெண்பாவின் பொது இலக்கணத்தைக் கூறுச் சான்றுடன் விளக்குக.
9) உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.
10) சொற் பொருட் பின்வரு நிலையணியை எடுத்துக் காட்டுடன் விளக்குக.